# மோடியும், பா.ஜ.க.வும் மட்டுமே ஒட்டுமொத்த இந்துக்கள் கிடையாது!

# விசாரணை அமைப்புகள் அனைத்தும் மோடியின் ஆணைப்படி செயல்படுகின்றன!

## "பா.ஜ.க. அரசிடமிருந்து அரசியல் சட்ட அமைப்பைக் காப்போம்" என நாடாளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆவேச உரை!

**புதுடெல்லி, ஜூலை 3-**

**"மோடியும், பா.ஜ.க.வும் மட்டுமே ஒட்டுமொத்த இந்துக்கள் கிடையாது!" எனவும், "விசாரணை அமைப்புகள் அனைத்தும் மோடியின் ஆணைப்படி செயல்படுகின்றன!" என்றும், "பா.ஜ.க. அரசிடமிருந்து அரசியல் சட்ட அமைப்பைக் காப்போம்" என நாடாளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆவேச உரையாற்றினார்.**

**குடியரசுத் தலைவர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானம் குறித்து மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசியதாவது:**

"எனது இன்றைய உரையை சிவன் படத்தை காண்பிப்பதில் இருந்து தொடங்குகிறேன். இந்தப் படத்தை இங்கு ஏன் காண்பிக்கிறேன் என்றால், இதில் உள்ள யோசனைகளை எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் கொடுக்கிறோம்.

### எதிர்க்கட்சியாக இருப்பதில் பெருமை!

ஒருபோதும் பயப்படக் கூடாது என்ற எண்ணமும் சிவனின் உருவத்தில் இருந்துதான் பிரதிபலிக்கிறது. சிவன் கழுத்தில் உள்ள பாம்பு உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும், அதில் இருந்து பின்வாங்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகிறது. அந்த உணர்வோடு தான் நாங்கள் போராடி வருகிறோம். இந்த யோசனை எங்களை எதிர்க்கட்சியாக மட்டுப்படுத்தியுள்ளது. எனக்கு இது தெரியும்.

### திரிசூலம் என்பது அகிம்சையின் சின்னம்!

நாங்கள் எதிர்க்கட்சியாக இருப்பதில் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன். எங்களை பொறுத்தவரை அதிகாரத்தை விட உண்மைதான் சக்தி வாய்ந்தது. எங்களுக்கு அதிகாரம் முக்கியமில்லை. ஆனால், உங்களுக்கு அப்படி இல்லை. உங்களுக்கு அதிகாரம் மட்டுமே முக்கியம். அதுதான் உண்மை.

சிவன் இடதுதோள் ஓரமாக திரிசூலத்தை பிடித்திருக்கிறார். திரிசூலம் என்பது வன்முறையின் அடையாளம் அல்ல. மாறாக, அகிம்சையின் சின்னம். அதனால்தான் இடதுபக்கம் வைக்கப்பட்டுள்ளது. வன்முறையின் சின்னமாக இருந்தால் சிவனின் வலதுகை பக்கம் திரிசூலம் இருந்திருக்கும். நாங்கள் பா.ஜ.க.வை எதிர்த்து போராடியபோது எங்களிடம் வன்முறை இல்லை. நாங்கள் உண்மையை பாதுகாக்க துணிந்தபோதும் வன்முறை வெளிப்படவில்லை.

### சத்தியமும், அகிம்சையும் மகாத்மா காந்தியின் போதனை!

உண்மை, தைரியம் மற்றும் அகிம்சையில் இருந்து வெளிப்படுகிறது. நீங்கள் வெறுக்கும் ஒரு சின்னமாக இருக்கலாம்.

அதுதான் காங்கிரஸ் கட்சியின் சின்னமான அபய் முத்ரா. பயமின்மையையும், சத்தியத்தையும், அகிம்சையும் இந்த முத்திரை வலியுறுத்துகிறது. சத்தியமும், அகிம்சையும் மகாத்மா காந்தியின் போதனைகள்.

காந்தி இறந்து விட்டதாகவும், ஆவணப் படம் மூலமே காந்தியை, உலகம் அறிந்ததாகவும் மோடி கூறுகிறார்.

பரமாத்மா மோடியின் ஆத்மாவுடன் நேரடியாக பேசுவார். நாம் மனிதர்கள். நாம் உயிரியல் ரீதியாக பிறந்தவர்கள். நமக்கு பிறப்பு, இறப்பு உண்டு. ஆனால் பிரதமர் மோடி தெய்வீக சக்தியால் வந்தவர்.

நாட்டில் மதங்களும் மத குருமார்களும் அகிம்சையைதான் போதித்து வந்ததாகவும், ஆனால், அன்பை போதிக்கும் இந்து மதம் குறித்து, பா.ஜ.க.வினர் 24 மணி நேரமும் வெறுப்பை பரப்பி வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

ராமர் பிறந்த அயோத்தியிலேயே பா.ஜ.க.வுக்கு மக்கள் பாடம் புகட்டியதே இதற்கு சிறந்த உதாரணம்.

நான் கவனித்த இன்னொரு விஷயம், ஒரு மதம் மட்டுமே தைரியத்தை கூறவில்லை. அனைத்து மதங்களும் தைரியத்தைப் பற்றி பேசுகின்றன. இஸ்லாம், சீக்கியம் என அனைத்து மதங்களும்



தைரியத்தை வலியுறுத்துகின்றன. உண்மையான இந்து தர்மத்தை பா.ஜ.க.வினர் பின்பற்றவில்லை. பா.ஜ.க.வினர் சகிப்புத் தன்மை இல்லாத இந்துக்கள். பிரதமர் மோடியும், பா.ஜ.க. வும் மட்டுமே ஒட்டுமொத்த இந்துக்கள் கிடையாது. (அயோத்தி பற்றி பேசத் தொடங்கியதும் மைக் அணைக்கப்பட்டது ஏன்?)

(மத நல்லிணக்கம் குறித்து ராகுல் காந்தி பேசும் போது பிரதமரும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் குறுக்கிட்டு பேசினர் ;

மக்களவை தேர்தலில் அயோத்தியில் வெற்றிபெற்ற சமாஜ்வாதி எம்.பி. அவதேஷுக்கு அவையிலேயே கைகுலுக்கி பாராட்டினார் ராகுல் காந்தி). "ராமர் பிறந்த அயோத்தியிலேயே பா.ஜ.க.வுக்கு மக்கள் பாடம் புகட்டிவிட்டனர். அயோத்தியில் தேர்தலில் போட்டியிட நரேந்திர மோடி இரண்டு முறை சர்வே நடத்தினார். ஆனால், அயோத்தியில் தேர்தலில் போட்டியிடாதீர்கள், அயோத்தி மக்கள் உங்களைத் தோற்கடிப்பார்கள் என்று கருத்துக் கணிப்பை நடத்தியவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அதனால்தான் நரேந்திர மோடி அங்கிருந்து சென்று வாரணாசியில் போட்டியிட்டார்".

மோடி ஜி, தயவு செய்து எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இந்த முறை குஜராத்தில் இண்டியா கூட்டணி உங்களை தோற்கடிக்கப் போகிறது.

சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டதுக்கு நானும் கை கொடுத்தேன். பிரதமர் மோடியும் கை கொடுத்தார். நான் கை கொடுத்தபோது நிமிர்ந்து நின்று கை கொடுத்த நீங்கள் ஓம்.பிர்லா, பிரதமர் கை கொடுக்கும்போது குனிந்து கை கொடுத்தீர்கள் சபாநாயகர் அரசியல் சார்பு இல்லாமல் செயலாற்ற வேண்டும்.

**சபாநாயகர் ஓம் பிர்லா:** பெரியவர்கள் முன் பணிந்து, சமமானவர்களுடன் சரிநிகராக கைகுலுக்க எனது கலாச்சாரம் எனக்குக் கற்றுக்கொடுத்துள்ளது. அதனைதான் நான் பின்பற்றினேன்.

**ராகுல் காந்தி:** உங்கள் வார்த்தைகளை நான் மதிக்கிறேன், ஆனால் இந்த அவையில் சபாநாயகரை விட பெரியவர்கள் யாரும் இல்லை.

### அக்னி வீரர் திட்டம் மோடிக்கான திட்டம்!

அக்னிவீரர் திட்டம் ராணுவத்துக்கான திட்டமல்ல; மோடிக்கான திட்டம். இத்திட்டத்தை உருவாக்கியது ராணுவம் அல்ல. பிரதமர் மோடிதான். அக்னிவீரர் திட்ட வீரர்களின் உயிரிழப்பை வீர மரணங்களாக பா.ஜ.க. அரசு ஏற்குமா? 'USE AND THROW' முறையில் ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் முறைதான் அக்னிபாத் திட்டம்.

### மணிப்பூருக்கு பிரதமர் செல்லாதது ஏன்?

மணிப்பூர் இந்தியாவின் ஒரு பகுதி இல்லையா? அங்கு ஏன் பிரதமர் மோடி செல்லவில்லை. பிரதமர் மோடியையும், அமித் ஷாவையும் பொறுத்தவரை மணிப்பூர் ஒரு மாநிலமே இல்லை. ராமர் கோயில் திறப்பு விழாவிற்கு அயோத்தி மக்களுக்கு அழைப்பு இல்லை. அம்பானி மற்றும் அதானிக்கே அழைப்பு விடுக்கப்பட்டது. அயோத்தி மேம்பாட்டு திட்டத்துக்காக அங்குள்ள ஏராளமான மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டது. ஆனால் அதற்கான இழப்பீடு வழங்கப்படவில்லை.

பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மீது திட்டமிட்டு தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுகிறது. திட்டமிட்டே தனது மக்களவை உறுப்பினர் பதவி மற்றும் அரசு இல்லத்தை பறிமுதல் செய்தனர். அமலாக்கத்துறை அதிகாரிகள் தம்மிடம், 20 மணிநேரம் விசாரணை நடத்தினர்.

### உண்மை பேசுவதை நிறுத்தப்போவதில்லை!

எக்காரணம் கொண்டும் உண்மை பேசுவதை நிறுத்தப் போவதில்லை. இந்திய அரசியலமைப்பை காப்பதில் "இந்தியா" கூட்டணி உறுதியாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் அரசியல் சாசனம் மீது திட்டமிட்ட தாக்குதல் நடைபெற்று வருகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து அரசியலமைப்பை பாதுகாத்து வருகிறோம். விசாரணை அமைப்புகள் அனைத்தும் மோடியின் ஆணைப்படியே செயல்படுகின்றன.

### "நீட்" தேர்வு வியாபாரத் தேர்வு!

பணக்கார குழந்தைகளுக்காகதான் 'நீட்', நெட் தேர்வுகள் கொண்டுவரப்பட்டுள்ளது. 'நீட்' தேர்வு பணக்காரர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளதே தவிர திறமையானவர்களுக்காக கிடையாது. மாணவர்களும், பெற்றோ ர்களும் 'நீட்' தேர்வு மீது நம்பிக்கையை இழந்துள்ளனர்.

மருத்துவப்படிப்புகளுக்கான 'நீட்' நுழைவுத்தேர்வு வணிகமயமாகிவிட்டது. பணம் இருந்தால்தான், மருத்துவப்படிப்பு என்ற நிலை தற்போது உருவாகி உள்ளது. பா.ஜ.க ஆட்சியில் 70க்கும் மேற்பட்ட கேள்வி தாள் கசிவு சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. 'நீட்' தேர்வு முறைகேடுகள் குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தில் அனுமதி அளிக்கப்படுவதில்லை.

'நீட்' என்பது தொழில் முறை தேர்வு அல்ல, 'நீட்' ஒரு கமர்சியல் தேர்வு 'நீட்' தேர்வின் மூலம் பயிற்சி மையங்கள் கோடிக்கணக்கில் வருவாய் ஈட்டுகிறது. 'நீட்' தேர்வில் 22 சதவீதம் மதிப்பெண் எடுத்தாலே தேர்ச்சி பெற்றதாக அறி விக்கப்படுவதால் லட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உரையாற்றினார்.

# தமிழில் சட்ட நூல்கள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

16. தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டம், 34/1997.

17.தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டம், 35/1997.

18. தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 46/1997.

19. தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற சட்டம், 44/1998.

20. தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டம், 10/1999.

21. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்களுக்கான நலநிதியச் சட்டம், 25/1999.

22. தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம், 07/2001.

23. தமிழ்நாடு உயிரோடு நபர் ஒருவரைப் புதைக்கும் சடங்கினையும் பழக்கத்தினையும் தடை செய்தல் சட்டம், 44/2002.

24. தமிழ்நாடு புகைபிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடை செய்யும் சட்டம், 04/2003.

25. தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம், 13/2006.

26. தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம், 26/2006.

27. தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டம், 08/2007.

28. தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளுக்கான நல வாரியச் சட்டம், 18/2007.

29. தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டம், 19/2007.

30. தமிழ்நாடு கிறித்துவப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டம், 33/2007.

31. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம், 31/2008.

32. தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டம், 48/2008.

33. தமிழ்நாடு அருந்ததியர்கள் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல்) சட்டம், 04/2009.

34. தமிழ்நாடு திருமணங்கள் பதிவுசெய்தல் சட்டம், 21/2009.

35. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்ப டுத்துதல்) சட்டம், 22/2009.

36. தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டம், 30/2009.

37. தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வைச் சட்டம், 32/2009.

38.தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டம், 04/2010.

39. தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டம், 08/2010.

40. தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 21/2010.

41.தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின் கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டம், 40/2010.

42. சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டம், 44/2010.

43. தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டம், 04/2011.

**தமிழ்நாடு மாநிலச் சட்டங்கள் புதிய பதிப்பு புத்தகங்கள்**

1. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழக சட்டம், 09/2012.

2. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம், 22/2012.

3. தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டம், 24/2012.

4. தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டம், 03/2013.

5.தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடை மீதான தடையை நீக்குதல்) சட்டம், 09/2014.

6. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 18/2014.

7.தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம், 24/2014.

8. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டம், 20/2017.

9. தமிழ்நாடு எல்லை வரையறை ஆணையச் சட்டம், 23/2017.

10.தமிழ்நாடு சொத்துரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், 42/2017.

11.தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 22/2018

12.தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 33/2018.

13.தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 35/2019.

14. தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல், சட்டம், 11/2020.

15. தமிழ்நாடு பொருளாதாரப் பள்ளிச் சட்டம், 25/2020.

16.தமிழ்நாடு அரசுப்பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம். பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றின் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமை அடிப்படையிலான சேர்க்கைச் சட்டம், 34/2020.

17. தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டம், 17/2021.

18.தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்), சட்டம், 14/2022.

19.தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நல நிதியச் சட்டம், 21/2022.

20. தமிழ்நாடு அடுக்குக்குடியிருப்பு சொத்துரிமைச் சட்டம், 44/2022.

மேற்கண்ட 100 சட்டப் புத்தகங்களையும், தமிழ்நாடு அரசின் இணையதளத்திலிருந்து (www.tn.gov.in) பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சட்டத்துறை அரசு செயலாளர் ஜார்ஜ் அலெக்சாண்டர், மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் தலைவர் ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் திருமதி தாரணி, உறுப்பினர்கள் கோபி ரவிக்குமார், முகமது ஜியாபுதீன், வில்ஸ்டோ டாஸ்பின், முரளி அருபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் - அன்னியூர் சிவாவை ஆதரித்து பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில்

# நந்திவாடி ஊராட்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வீடு வீடாக வாக்குச் சேகரிப்பு!

## இ. ஜோசப் அண்ணாதுரை - இ. எஸ். பெர்னார்ட்- ஏ.கே.கருணாகரன் பங்கேற்பு!

*விக்கிரவாண்டி, ஜூலை 3 -*

*விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பல்லாவரம் வடக்கு, தெற்கு பகுதி திமுக மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க-க்கு தேர்தல் பணியாற்ற ஒதுக்கப்பட்டுள்ள. நந்தி வாடி ஊராட்சி பாக எண் 137 க்கு உட்பட்ட பகுதிகளில் விக்கிரவாண்டி மேற்கு ஒன்றிய தேர்தல் பணி பொறுப்பாளர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா. மோ. அன்பரசன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் பாக பொறுப்பாளர் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ்.பெர்னார்ட், செம்பாக்கம் வடக்கு கழக செயலாளர் ஏ. கே. கருணாகரன், பொதுக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா ஆகியோர் முன்னிலையில் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசு முதலமைச்சர் தளபதி அவர்களின் சிறப்பான திட்டங்களான மகளிர் உரிமைத் தொகை இலவச பேருந்து வசதி நான் முதல்வன் திட்டம் கல்லூரி மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மற்றும் அரசின் பல்வேறு பல்வேறு சிறப்பு திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துரைத்து சமூக நீதி காத்த நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உங்களின் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும்,*

*இந்த கிராமத்திற்கு பல்வேறு நல்ல திட்டங்களை கடந்த சட்டமன்ற உறுப்பினர் கொண்டு வந்தார் இன்னும் பல்வேறு திட்டங்களை நமது வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா தொகுதிக்கு கொண்டு வருவார்.*

*எனவே நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் உங்கள் வீட்டுப் பிள்ளையான அன்னியூர் சிவாவை வெற்றி பெறச் செய்யுங்கள் எனகூறி வாக்குச் சேகரித்தார்.*



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிடும் அன்னியூர் சிவாவை ஆதரித்து வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டப்பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் வாக்குச் சேகரித்தார். உடன் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.